செ.வெ.எண்: /2008 செ.ம.தொ.அ நாள்:06.10.2008

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு நல வாரியம் புதியதாக அமைக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப., தகவல்

தமிழ் நாட்டிலுள்ள பழங்குடியின மக்கள் சமூக பொருளாதார, கல்வி நிலைகளில் திட்டமிட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென அவர்களுக்கு தனியாக ஒரு நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி நல வாரியத்திற்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், அரசுசார்ந்த உறுப்பினர்களாக 6 நபர்களையும் அலுவல் சாரா உறுப்பினர்களாக 13 நபர்களையும் ஏற்படுத்தியுள்ளார்கள்.

மேற்படி வாரியத்தின் மூலம் உறுப்பினர்களாக பதிவு செய்யப்படும் பழங்குடியினர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் செயல்படுத்த மாநில அளவில் ரூ.1.00 கோடி (ரூபாய் ஒரு கோடி பட்டும்) நிதி ஒப்பளிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்காணும் வாரியத்தின் மூலம் திட்டங்களின் பயன்கள் பெற மாவட்டத்தில் பழங்குடியினத்தவரை தேர்ந்தெடுக்கவும், அவர்களை வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்வதற்கான விண்ணப்பிக்க வேண்டிய விண்ணப்ப படிவத்தின் மாதிரி கீழே தரப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்.

தமிழ் நாட்டில் உள்ள 18 வயது முதல் 65 வயது உடைய பழங்குடியின மக்களிடமிருந்து (அரசு/அரசு சார்ந்த மற்றும் அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் (Organized Sector) பணிபுரிபவர்கள் மற்றும் இதர நல வாரியங்களில் உறுப்பினர்களாக உள்ள பழங்குடியினர் நீங்கலாக) பழங்குடியின நல வாரியத்திற்க உறுப்பினர்கள் சேர்க்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தகுதியுடையோர் கீழ்காணும் மாதிரி படிவத்தில் விவரங்களை நிரப்பி தொடர்புடைய கிராம நிர்வாக அலுவலர் அல்லது தனி வட்டாட்சியர் (ஆதிந) அல்லது தொடர்புடைய, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல

அலுவலர் அவர்களிடமோ நேரிலோ/தபால் மூலமாகவோ அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## தமிழ்நாடு பழங்குடியின நல வாரியம்
## உறுப்பினர் பதிவு செய்வதற்கான விண்ணப்பம்

பாஸ்போர்ட அளவு
புகைப்படம்
ஒட்டவும்

| | | |
|---|---|---|
| 1 | விண்ணப்பதாரரின் பெயர் | |
| 2 | தந்தை/கணவர் பெயர் | |
| 3 | பிறந்த நாள்/வயது (01.04.2008அன்று) (வயதை நிருபிப்பதற்கான ஆவணத்தை இணைக்கவும் குடும்ப அட்டை / மருத்துவ சான்றிதழ் முதலியன) | நாள் \| மாதம் \| ஆண்டு<br>வயது: |
| 4 | சாதி மற்றும் உட்பிரிவு | |
| 5 | திருமண நிலை: (திருமணமானவர்/ திருமணமாகாதவர்/ கணவரை / மனைவியை இழந்தவர்) | |
| 6 | நிலையான முகவரி | |
| 7 | தற்போதைய முகவரி | |
| **8** | **குடும்ப உறுப்பினர்கள் விவரம்** | |

| **வ. எண்.** | **பெயர்** | **உறவு முறை** | **இனம்** | **வயது** | **கல்வித் தகுதி** | **தொழில்** |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |
| 5 | | | | | | |
| 6 | | | | | | |
| 7 | | | | | | |

மேற்கூறிய விவரங்கள் அனைத்தும் உண்மை என உறுதி கூறுகிறேன்.

இடம்:

நாள்:

விண்ணப்பிப்பவரின் கையொப்பம்

இடது பெருவிரல் ரேகை

குறிப்பு

1. பதிவு செய்ய (அ) குடும்ப அட்டைம ற்றும் சாதிச்சான்றிதழ் இவைகளின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும்.
2. தாக்கல் செய்யப்படும் சாதிச்சான்றிதழ் தேவைப்படின் அதன் மெய்த்தன்மை ஆய்விற்கு உட்பட்டது.

தமிழ் நாட்டில் பழங்குடியினருக்கு என ஏற்படுத்தப்பட்ட நல வாரியத்தில் உறுப்பினா்களாக சேர விரும்பும் பழங்குடியினா்கள் நிரந்தர இருப்பிடச்சான்று, சாதிச்சான்று மற்றும் குடும்ப அட்டை நகல் போன்ற ஆதாரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. நல வாரிய திட்ட உதவிகள் பெறுவதற்கான வழிமுறைகள் (Guide lines) மற்றும் அடையாள அட்டை பெறுவதற்கு மாவட்ட அளவில் காஞ்சிபுரம் மாவட்ட ஆதிதிராவிடா் மற்றும் பழங்குடியினா் நல அலுவலரையும் அந்தந்த வட்டத்தின் ஆதிதிராவிடா் நல தனிவட்டாட்சியா்களை அனுகும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு பழங்குடியினா் நல வாரியம் மூலம் பழங்குடியின மக்களுக்கு கீழ்காணும் விவரப்படி நல திட்டங்களுக்கு உதவித் தொகை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

1. விபத்து ஈட்டுறுதி திட்டம்.
2. இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை
3. ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை
4. கல்வி உதவித்தொகை
5. திருமண உதவித்தொகை
6. மகப்பேறு உதவித்தொகை
7. மூக்கு கண்ணாடி செலவுத்தொகையை ஈடுசெய்தல்
8. முதியோா் ஓய்வூதியம் மாதந்தோறும்

மேற்காணும் நல வாரியத்தில் உறுப்பினா்களாக சோ்ந்து பயனடையுமாறு அனைத்து பழங்குடியின மக்களையும் மாவட்ட ஆட்சித்தலைவா் திரு.கே.சந்தோஷ் கே.மிஸ்ரா, இ.ஆ.ப., அவா்கள் கேட்டுக் கொண்டுள்ளாா்.

இணையதளம்:

செய்தி வெளியிடுபவா்:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலா்,
காஞ்சிபுரம்.

இணைப்பு: விண்ணப்ப படிவம்